SE – 071

**IV Semester B.A./B.Sc./B.Sc.(FAD)/B.C.A. Examination, September 2020**
**Freshers+Repeaters (2015-16 and Onwards) (CBCS)**
**TAMIL LANGUAGE (Part – I) (Paper – IV)**

Time : 3 Hours                                                Max. Marks : 70

I. விரிவான விடை தருக.

1) 'புறங்கூறாமை' என்னும் அதிகாரத்தின் கருத்துகளை திருவள்ளுவர் வழிநின்று விளக்குக.

**(அல்லது)**

வலியறிதலின் சிறப்புகளை திருக்குறள் வழி விளக்குக. 10

2) காவிரிபூம்பட்டினத்தின் புறச்சேரி, பரதவர் செயல் குறித்து எழுதுக.

**(அல்லது)**

திருமாவளவன் மேற்கொண்ட 'கன்னிப்போர்' குறித்த செய்திகளை 'பட்டினப்பாலை' வழிநின்று விளக்குக. 10

II. இடம் சுட்டிப்பொருள் விளக்கம் தருக.

1) பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும்.

**(அல்லது)**

இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்நிறை நீர்கொண் டனள் 4

2) வான்பொய்ப்பினும் தான்பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி

**(அல்லது)**

முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்
வார்இருங் கூந்தல் வயங்குஇழை ஒழிய
வாரேன் வாழிய நெஞ்சே ! 4

P.T.O.

III. அ) **ஒன்று** குறித்துத் திறனாய்வு வடிவில் விடை தருக. 15

1) இராமலிங்க சுவாமிகளின் இளமைப் பருவம் குறித்த செய்திகளை 'வள்ளலார்' நாடகம் வழி விளக்குக.

2) நடராச பெருமான் திருக்கோயிலில் இராமலிங்க சுவாமிகளுக்கும் கோயில் தீட்சிதர்களுக்கும் இடையே நடந்த வாக்குவாதம் குறித்து எழுதுக.

ஆ) எவையேனும் **இரண்டிற்கு** சுருக்கமான விடை தருக. **(2×5=10)**

1) காக்காய் கறிசமைத்து கருவாடுமென்று
தின்பர்-இதன் விளக்கம் தருக.

2) 'நமசிவய' என்னும் திருவைர்ந்தெழுத்துகளின் விளக்கம் தருக.

3) 'வீரையன்' பாத்திரப்படைப்பு குறித்து எழுதுக.

4) மூடமுண்ட வித்துவான்- விளக்குக.

IV. நீங்கள் பணிபுரியும் பாண்டியன் குளிர்ச்சாதனப் பெட்டிகள் தயாரிப்பு நிறு-வனத்தில் சிற்றுண்டிச்சாலை மற்றும் ஓய்வு அறைகளை அமைத்துத் தரக்கோரி, உதவி மேலாளர் என்ற நிலையில், அதன் நிருவாக இயக்குநருக்கு கோப்பு ஒன்று தயார் செய்து அனுப்புக. 8

V. **மூன்றில்** ஒருபங்காகச் சுருக்கி வரைக. 9

உலகில் மகிழ்ச்சியிடனும் வெற்றியிடனும் வாழ்க்கையை நடத்த அறிவுத்திறன் மட்டுமே அவசியமானது வேறு எதும் தேவையில்லை எனப் பொதுவாக எண்ணப்பட்டு வந்தது. ஆனால் அக்கருத்து தவறானது அறிவு மட்டும் போதாது, ஊக்கம் ஊட்டிச் செயலாற்றல் அளிக்கவல்ல மனவெழுச்சிகளும் சீரான மனச் சமநிலையும் தேவை என மனநூல் ஆராய்ச்சி சுட்டிக் காட்டுகிறது. மனத்தின் சீரானசமநிலையை மனவெழுச்சிகள் சில சமயம் இலைத்துவிடக்கூடிய ஆற்றல் பெற்றவை எனவே தான் மகிழ்சிவுள்ள வாழ்க்கைக்கு மனச் சமநிலையும் சேர்த்து மேலே குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையைக் கூறினால், வெற்றி வாழ்க்கைக்குத் தேவைப்படும் அறிவுத்திறன் குறைவானது, ஆனால் மனவெழுச்சியின் பங்கு மிப்பெரியது இந்த உண்மையை ஒரு மேனாட்டு மன நூலறிஞர் ''மனிதனானவன் மனவெழுச்சிகள் என்னும் பரந்த கடலில் மிதக்கும் ஒரு சிறு அறிவுத் துரும்புக்குச் சமமானவன்'' என்கிறார்.